# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - தொடக்ககாலத் தமிழ்ச் சமூகமும் பண்பாடும் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 9ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

10 x 2 = 20

1) தொல்லியல் ஆய்வுக்களங்கள் கடந்த கால வரலாற்றுச் சான்றுகளை அளிக்கின்றன – உன் கருத்துகளை முன்வைக்கவும்.

**பதில் :** (i) தொல்லியல் அகழாய்வுப் பணி என்பது பண்டைக்கால சமூகத்தின் வாழ்க்கை முறைகளை அறிந்துகொள்ளும் நோக்கில் முறைப்படி ஓர் இடத்தை அகழ்ந்து, சான்றுகளாகக் கிடைத்த பொருள்களை முறையாக திரட்டி ஆராய்வதாகும்.
(ii) வரலாற்றின் தொடக்க காலத்தைச் சேர்ந்த இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் வழியாகச் சங்க கால மக்களின் வாழ்க்கை முறை குறித்து சான்றுகள் கிடைத்துள்ளன.(எ.கா.) தமிழ்நாட்டின் அரிக்கமேடு, அழகன்குளம், கீழடி, கொடுமணல், உறையூர், கரூர், காஞ்சிபுரம், காவிப்பூம்பட்டினம் முதலியன.

2) சங்க காலம் குறித்து அறிந்து கொள்ள நாணயங்கள் எந்தளவுக்கு ஒரு முக்கியமான சான்றாக உள்ளன?

**பதில் :** (i) முதன் முதலாக, சங்க காலத்தில் தான் செலாவணிக்குரிய பொருளாக நாணயங்கள் புழக்கத்திற்கு வந்தன.
(ii) சேர, சோழ, பாண்டிய அரசர்களின் நாணயங்கள், முத்திரை பொறிக்கப்பட்ட நாணயங்கள், ரோமானிய நாணயங்கள் ஆகியவை சங்க காலம் குறித்து அறிந்து கொள்ள உதவும் மற்றொரு வகையான சான்று ஆகும்.
(iii) சில சமயம் மதிப்புயர் செல்வமாகவும் நாணயங்கள் பாதுகாக்கப்பட்டன.
(iv) மேலும் பலவற்றை உருக்கி அவர்கள் அணிகலன்களும் செய்திருக்கலாம்.

3) சங்க காலத்தில் விவசாயம் ஒரு முக்கியமான வாழ்வாதாரமாக இருந்தது. இதற்கான காரணங்களைக் கூறு.

**பதில் :** (i) சங்ககால மக்களின் உயிர் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்வதில் வேளாண்மையே முதலிடத்தில் இருந்தது.
(ii) நன்செய் நிலத்திலும் புன்செய் நிலத்திலும் பயிர்த்தொழில் நடைபெற்றது.
(iii) ஆற்று வடிநீர்ப் பகுதிகளிலும் குளம். ஏரி போன்ற நீர் நிலைகளால் பாசன வசதி பெற்ற பகுதிகளிலும் நெல் பயிரிடப்பட்டது.
(iv) நெல், கரும்பு, சிறுதானியங்கள் பயிரிடப்பட்டன.

4) அயல் நாடுகளுடனான தொடர்பு பழங்காலத் தமிழகத்துக்குப் பெருமை சேர்த்தது – இதற்கான சான்றுகளுடன் இக்கூற்றை நிறுவுக.

**பதில் :** (i) கிழக்கிலும் மேற்கிலும் பல வெளிநாடுகளுடன் தமிழர்கள் வணிகத் தொடர்பு வைத்திருந்தனர்.
ii) ரோமானியக் கப்பல்கள் பருவக்காற்று வீசும் சமயத்தில் மேலைக்கடலான அரபிக்கடலை கடந்து தமிழகக் கடற்கரைகளுக்கு வந்தன.
(iii) மிளகு போன்ற நறுமணப் பொருட்களும், யானைத் தந்தம், நவமணிகள் உள்ளிட்ட அரிய பொருட்களும் தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதி ஆயின.
(iv) தங்கம், வெள்ளி, செம்பு,உள்ளிட்ட உலோகங்கள் இறக்குமதி ஆயின.

5) கீழடி பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** 1. மதுரையிலிருந்து ராமேஸ்வரம் செல்லும் நெடுஞ்சாலையில் சிலைமான் என்ற ஊருக்கு அருகில் கீழடி உள்ளது.
2. இங்குள்ள பள்ளிச் சந்தைத்திடல் என்று அழைக்கப்படும் தென்னந்தோப்பில் இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறையினர் நடத்திய அகழாய்வுகள் மூலம் சங்க காலத்து நகரம் புதையுண்டிருப்பதைக் கண்டறிந்தனர்.

6) நடுகற்கள் -சிறு குறிப்பு வரைக.

**பதில் :** (i) போர்க்களத்திலும் ஆநிரை கவரும் சண்டைகளிலும் வீரமரணம் அடைந்தவர்களின் நினைவாக நடுகற்கள் நடப்பட்டன.
(ii) கால்நடைகளைக் கவர்ந்து வருபவர்களை, எதிர்த்துப் போராடி இறந்துவிடும் வீரர்களைத் தியாகிகளாகப் போற்றி அவர்களின் நினைவாக நடுகற்களை நிறுவினர்.
(iii) போர்க்களக் காட்சிகளையும், நடுகற்களைக் குறித்தும், அவற்றை வழிபட்ட முறைகளைக் குறித்தும் சங்க

இலக்கியங்களில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(iv) நடுகற்கள் நடப்படுவதற்கான வழிமுறைகள் குறித்து தொல்காப்பியம் விரிவாக எடுத்துரைக்கிறது.

(v) தேனி மாவட்டத்தின் புலிமான்கோம்பை, தாதப்பட்டி ஆகிய இடங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தின் பொற்பனைக்கோட்டை என்ற இடத்திலும் தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட சங்க கால நடுகற்கள் காணப்படுகின்றன.

7) ஐந்து திணைகளைக் கூறுக. அல்லது நிலங்களைக் கூறுக.

**பதில் :** ஐவகை நிலங்கள் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.

8) சங்க கால மக்களின் வாழ்க்கை முறைக்கான பலவகையான தொல்லியல் சான்றுகள் கிடைத்த இடங்கள் யாவை?

**பதில் :** அரிக்கமேடு, அழகன் குளம், கீழடி, கொடுமணல், உறையூர், கரூர், காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, வசவ சமுத்திரம், ஆகிய தமிழக இடங்களிலும், கேரளத்தில் பட்டணம் என்ற இடத்திலும் சான்றுகள் கிடைத்தன.

9) எரித்திரியன் கடலின் பெரிப்ளஸ் குறிப்பு வரைக.

**பதில் :** 1. எரித்திரியன் கடலின் பெரிப்ளஸ் என்பது பண்டைய கிரேக்க நூலாகும். இந்நூலின் ஆசிரியர் யாரென்று தெரியவில்லை.

2. பெரிப்ளஸ் என்றால் கடல்வழிகாட்டி என்று பொருள். செங்கடலைச் சுற்றியுள்ள கடற்பரப்பே எந்திரியன் கடல் ஆகும்.

3. முசிறி, தொண்டி, குமரி, கொற்கை ஆகிய சங்ககாலத் துறைமுகப் பட்டினங்களையும், சேர,பாண்டிய அரசர்கள் குறித்தும் இந்நூலில் குறிப்புகள் உள்ளன.

10) ஐவகை நிலங்களின் தெய்வங்களைக் கூறுக.

**பதில் :** குறிஞ்சி - முருகன்
முல்லை - திருமால்
மருதம் - இந்திரன்
நெய்தல் - வருணன்
பாலை - கொற்றவை

## 5 மதிப்பெண் வினாக்கள் 6 x 5 = 30

11) தமிழகத்தின் அரசியல் சக்திகள் எந்தளவுக்குச் சங்க கால ஆட்சி அமைப்பின் மீது தாக்கம் செலுத்தின?

**பதில் :** (i) சங்க காலத்திற்கான அடித்தளம் இரும்புக் காலத்தில் வேர் கொண்டது,

(ii) இரும்புக் காலத்தில் மக்கள் குழுக்களாக வாழ்ந்து வந்தனர். தலைவர்கள் அந்நிலப்பகுதிகளைத் தமது ஆளுகைக்குக் கீழ் கொண்டு வந்தனர்.

(iii) இவ்வாறு உருவான தலைவர்களில் இருந்தே வரலாற்றின் தொடக்கக் காலத்தில் வேந்தர்கள் தோன்றினார்கள்,

(iv) வேளிர்கள் என்போர் சங்க காலத்தின் குறுநில மன்னர்கள் ஆவர்.

**மூவேந்தர்:**

(i) சங்க கால ஆட்சியாளர்களில் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்களே முன்னிலையில் இருந்தனர்.

(ii) அக்காலத்தில் பெரு நகரங்களும் துறைமுகப்பட்டினங்களும் மூவேந்தரின் ஆளுகைக்கு கீழேயே இருந்தன.

**சேரர்:**

(i) அசோகரின் கல்வெட்டுகளில் கேரளபுத்திரர்கள் என்று குறிக்கப்பட்டுள்ள சேரர் தற்காலத்துக் கேரளத்தையும், தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியையும் ஆட்சி புரிந்தனர்.

(ii) தலைநகராக வஞ்சியும், துறைமுகப்பட்டினங்களாக முசிறியும் தொண்டியும் இருந்தன. (iii) சங்க இலக்கியமான பதிற்றுப்பத்து சேர அரசர்கள் குறித்தும் அவர்களுடைய நாட்டின் எல்லைகளைக் குறித்தும் பேசுகிறது.

(iv) வில்லும் அம்பும் சேரர்களின் இலச்சினையாகும்.

**சோழர்:**

(i) காவிரி வடிநிலப்பகுதியையும் தமிழ்நாட்டின் வடபகுதிகளையும் ஆண்ட சோழர்களுக்கு உறையூர் தலைநகராக இருந்தது.

(ii) காவிரி ஆறு வங்கக் கடலில் கலக்கும் பூம்புகார் என்ற காவிரிப்பூம்பட்டினம் அவர்களுடைய துறைமுகம் ஆகும்.

(iii) சோழ மன்னர்களின் தலைச்சிறந்தவர் கரிகால் சோழன், காவிரி ஆற்றின் நீர்பெருக்கைப் பயன்படுத்தி பாசன வசதிகள் செய்து விவசாயம் தழைக்கச் செய்த பெருமைக்குரியவர்.

(iv) சோழர்களின் இலச்சினை புலி, அவர்கள் சதுரவடிவிலான செப்பு நாணயங்களை வெளியிட்டனர். அவற்றின் முகப்பில் புலியின் உருவமும் மறுபுறத்தில் யானை மற்றும் புனிதச் சின்னங்களும் காணப்படுகின்றன.

**பாண்டியர்:**

(i) பாண்டியர்கள் குறித்தும் அசோகரது கல்வெட்டுகளில் குறிப்புகள் உள்ளன. மதுரையைத் தலைநகராகக் கொண்டு தென்தமிழகத்தை அவர்கள் ஆண்டனர்.

(ii) தமிழ்ச் சங்கங்களை நிறுவி ஆதரவு அளித்தவர்கள் என்று தமிழ் இலக்கியங்கள் பாண்டிய அரசர்களைப் போற்றுகின்றன.

(iii) பாண்டியர்களின் இலச்சினை மீன் ஆகும்.

**வேளிர் / குடித்தலைமை:**

(i) தமிழகத்தை ஆட்சிபுரிந்த மூவேந்தர்களைத் தவிர பல குறுநில மன்னர்களும் சிறிய பகுதிகளில் குடித்தலைமை ஏற்றிருந்தனர்.

(ii) குறுநில மன்னர்கள் வேளிர் என்றும் அழைக்கப்பட்டனர்

(iii) வேளிரில் கடையேழு வள்ளல்களான பாரி, காரி, ஓரி, நள்ளி, பேகன், ஆய், அதியமான் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

12) சங்க காலத்தில் தொழில்களும் கைவினைக் கலைகளும் எவ்வாறு பொருளாதாரத்தை மேம்படுத்தின?

**பதில் :** சங்க காலத்தில் தொழில்களும் கைவினைக் கலை

**கைவினைக் கலைகள்:**

(i) கைவினைத் தயாரிப்புகளும், மிக நுண்ணிய வேலைப்பாடுடைய தொல்பொருள்களும் நகர வாழ்வின் முக்கியமான அடையாளங்களாகும்.

(ii) சங்க காலத்தில் பல்வேறு பொருள்களைத் தயாரிக்கும் நிபுணத்துவம் பெற்ற தொழிலாளர்கள் இருந்தனர்.

(iii) பொருள் உற்பத்தி செய்யும் அமைப்புகள் தொழிற் கூடங்கள் ஆகும்.

**மட்கலங்கள் செய்தல்:**

(i) மட்கலங்கள் செய்வது பரவலாக எல்லா இடங்களிலும் காணப்பட்டது. மக்களின் அன்றாட வாழ்வுக்குப் பலவிதமான மட்கலங்கள் தேவையாக இருந்தன.

(ii) கரியநிறத்தவை, செந்நிற வண்ணம் பூசிய வெள்ளைக் கோடுகள் வரையப்பட்டவை, கருப்பு சிவப்பு நிறத்தவை என்று பலவிதமான மட்கலங்கள் தயாரிக்கப்பட்டன.

**இரும்பு உருக்குத் தொழில்:**

(i) இரும்பைக் கொண்டு கருவிகள் செய்வதும் முக்கியமான தொழிலாக இருந்திருக்கிறது.

(ii) இரும்பை உருக்கும் உலைகளும் இருந்தன. அகழாய்வு மேற்கொண்ட பல இடங்களில் கொல்லுலைகள், உருக்கு உலைகள் ஆகியன இருந்த தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

(iii) இரும்பில் கருவிகள் செய்தோர் குறித்து சங்க இலக்கியத்திற்கும் குறிப்புகள் உள்ளன.

iv) உழுகருவிகளும், வாள், ஈட்டி கத்தி போன்ற படைக்கருவிகளும் தயாரிக்கப்பட்டன.

**கல்லில் செய்த அணிகலன்கள்:**

(i) சங்க காலத்து மக்கள் பலவிதமான அணிகலன்களை அணிந்து தங்களை அழகுபடுத்திக் கொண்டனர்.

(ii) எளிய மக்கள் பூக்களையும் இலை தழைகளையும் சூடிக் கொண்டதுடன், சுட்ட களிமண், உலோகம் ஆகியவற்றிலும் அணிகலன்கள் செய்து அணிந்தனர்.

(iii) செல்வர்கள் செம்பு, தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களில் செய்த நகைகளில் நவமணிகளையும் பதித்து அழகுபடுத்தி அணிந்தனர்.

**தங்க ஆபரணங்கள்:**

(i) ரோமானியர்களின் நாணயங்களைக் கொண்டும் நகைகள் செய்யப்பட்டன.

(ii) கேரளத்தின் பட்டணத்தில் பொன்னை உருக்கும் உலை இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

**கண்ணாடி மணிகள்:**

(i) கண்ணாடி மணிகள் செய்யும் முறையை அக்கால மக்கள் அறிந்திருந்தனர்.

(ii) சிலிக்கா மற்றும் பிற பொருள்களை உலையிலிட்டு உருக்கி நீண்ட சிறிய குழல்களாக்கிப் பின்னர் அவற்றைச் சிறுசிறு மணிகளாக நறுக்கினர்.

(iii) கண்ணாடி மணிகள் பல்வேறு வண்ணங்களிலும் வடிவங்களிலும் தயாரிக்கப்பட்டன.

**முத்துக்குளித்தலும் சங்க வளையல்களும்:**

(i) கீழடி அகழாய்வின் போது ஒரு முத்து கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ii) சங்குகளை அரிந்து வளையல் செய்யும் தொழிலும் சங்க காலத்தில் சிறப்புற்றிருந்தது.

(iii) பாம்பன் கடல் பகுதிகளில் சங்குகளைச் சேகரித்தனர். கைவினைக் கலைஞர்கள் அவற்றை அழகுற அறுத்து எழிலான வளையல்களைச் செய்தனர்.

(iv) பெண்கள் சங்கு வளையல்கள் அணிந்திருந்தது குறித்துச் சங்க இலக்கியங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன.

**துணி நெசவு:**

(i) துணி நெசவு இன்னொரு முக்கியத் தொழிலாகும். நூல் நூற்கும் கதிர்களும் துண்டுத் துணிகளும் கொடுமணலில் கிடைத்திருக்கின்றன.

(ii) கலிங்கம் மற்றும் பிற வகைத் துணிவகைகள் குறித்து இலக்கியங்களில் குறிப்புகள் உள்ளன.

(iii) பருத்தியிலிருந்து நூலை எடுப்பதற்கு நூல் நூற்கும் கதிர் பயன்படுகிறது.

13) 'திணை' பற்றி விவரி.

**பதில் :** 1. தமிழின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியத்தில் திணை என்ற கருத்து விவரிக்கப்பட்டுள்ளது.

2. திணை என்பது குறிப்பிட்ட இயற்கை நிலவமைப்பையும், அதன் வாழ்வியல் முறைகளையும் குறிப்பதாகும்.

3. சங்ககாலச் செய்யுள்கள் திணை அடிப்படையிலேயே தொகுக்கப்பட்டுள்ளன. சங்ககால செய்யுள்களை அகத்திணைப் பாடல்கள் என்றும் புறத்திணைப் பாடல்கள் என்றும் பிரிக்கலாம்.

4. அகத்திணை என்பது காதல் வாழ்வையும் குடும்ப வாழ்வையும் குறிக்கும்.

5. புறத்திணை என்பது வாழ்வின் பிற அம்சங்களையும் குறிப்பாக, போர், வீரம் முதலிய பொருள்களைப் பேசுகிறது.

6. கந்திணை என்பது தமிழ் நாட்டின் கந்து வகையான நிலப்பகுதிகளைக் குறிக்கும்.

7. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன சந்து வகையான நிலப்பகுதிகளாகும்.

8. ஒவ்வொரு திணைக்கும் தனியே கடவுள், தொழில், மக்கள், பண்பாடு போன்றவை உண்டு.

14) சங்க காலத்திலிருந்த நம்பிக்கைகளும், வழிபாட்டு முறையும் பற்றி விவரி.

**பதில் : சங்க காலத்திலிருந்த நம்பிக்கைகளும், வழிபாட்டு முறையும்:**

(i) சங்க காலச் சமூகம் மற்றும் பொருளாதார அமைப்பில் பன்மைத்துவம் காணப்படுவது போலவே மக்களின் வழிபாட்டு முறைகளிலும் பன்மைத்துவம் காணப்படுகிறது.

(ii) ஆவி வழிபாடு, முதாதையர் வழிபாடு, வீரர்கள் வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு போன்றவை சங்க காலத்தில் இருந்தன.

(iii) ஐந்திணைகளுக்கும் உரிய வழிபாட்டு கடவுள்களைத் தொல்காப்பியம் கட்டுகிறது. குறிஞ்சிக்கு முருகன், முல்லைக்குத் திருமால், மருதத்திற்கு இந்திரன், நெய்தலுக்கு வருணன், பாலைக்குக் கொற்றவை என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

(iv) எனினும் மக்கள் வீரமரணம் எய்திய வீரர்களையும், தமது குல முதாதையர்களையும், அதிக அளவில் வழிபட்டனர்.

(v) இயற்கைக்கு மீறிய ஆற்றல் கொண்ட அணங்கு குறித்துச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது.

(vi) குகைகளில் காணப்படும் தமிழ் பிராமி கல்வெட்டுகள் மூலம் சமண சமயம் வழக்கில் இருந்தமை தெரிகிறது. வேள்விகள் மேற்கொள்ளப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன.

(vii) சில இடங்களில் புத்த சமயமும் இருந்தது. வெவ்வேறு குழுக்கள் வேறுவேறான வழிபாட்டு முறைகளைக் கொண்டிருந்தனர்.

15) சங்க கால திணை என்பதன் நில அமைப்பையும், வாழ்வியல் முறைகளையும் விளக்குக

**பதில் : திணை:**

(1) தமிழின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியத்தில் திணை என்ற கருத்து விவரிக்கப்பட்டுள்ளது. திணை என்பது குறிப்பிட். இயற்கை நிலவமைப்பையும், அதன் வாழ்வியல் முறைகளையும் குறிப்பதாகும்.

(ii) சங்கச் செய்யுள்கள் நிணை அடிப்படையிலேயே தொகுக்கப்பட்டுள்ளன மனித வாழ்க்கையையும். இயற்கையோடு மனிதர்கள் கொண்டிருந்த நெருக்கமான உறவையும் அவை படம் பிடித்துக் காட்டுகின்றன.

(iii) சங்க காலச் செய்யுள்களை பொருண்மை அடிப்படையில் பொதுவாக அகத்திணைப் பாடல்கள் என்றும் புறத்திணைப் பாடல்கள் என்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(iv) அகத்திணை என்பது காதல் வாழ்வையும் குடும்ப வாழ்வையும் குறிக்கும். புறத்திணை என்பது வாழ்வின் பிற அம்சங்களையும் குறிப்பாக போர், வீரம் முதலிய பொருள்களைப் பேசுகிறது. ஐந்திணை: ஐந்து திணைகள் அல்லது ஐந்து வகை நிலப்பகுதிகள்

(i) ஐந்திணை என்பது தமிழ்நாட்டின் ஐந்து வகையான நிலப்பகுதிகளைக் குறிக்கும். இந்த ஐந்து வகை நிலங்களும் தனித்த பண்புகள் கொண்டவை.

(ii) ஒவ்வொரு திணைக்கும் தனியே கடவுள். தொழில், மக்கள், பண்பாடு போன்றவை உண்டு. இந்த வகைப்பாடு ஐவகை நிலங்களில் வாழ்ந்த மக்களின் உண்மையான வாழ்க்கைச் சூழலைப் பிரதிபலிப்பதை அறிஞர்கள் பலர் விளக்கியுள்ளனர்.

ஐவகை நிலங்கள் குறிஞ்சி , முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகும்.

(i) மலையும் மலைச் சார்ந்த பகுதிகளும் குறிஞ்சி

(ii) காடும் காடு சார்ந்த பகுதிகளும் முல்லை

(iii) வயலும் வயல்வெளி சார்ந்த பகுதிகளும் மருதம்

(iv) கடலும் கடல் சார்ந்த பகுதிகளும் நெய்தல்

(v) வறண்ட நிலப்பப்பகுதி பாலை.

16) குறிப்பு வரைக - பட்டணம், கொடுமணல், கீழடி.

**பதில் :** பட்டணம், கொடுமணல், கீழடி ஆகிய இடங்கள் சங்க காலத்தைப் பற்றி அறிந்து கொள்ளும் மிக முக்கியமான தொல்லியல் ஆய்வு களங்களாகும். இவ்விடங்களிலிருந்து சங்க கால மக்களின் வாழ்க்கை முறை பற்றிய பல வகையான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன.

**பட்டணம் :**

கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டத்திலுள்ள வடக்கப் பரவூர் என்ற ஊரை ஒட்டிய வடக்கேகரா என்ற சிற்றூரின் அருகே பட்டணம் அமைந்துள்ளது. மேலை நாடுகளோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்த பழங்காலத் துறைமுகம் தான் பட்டணம்.

கொடு மணல் :

கொடு மணல் தமிழ்நாட்டில் ஈரோடுக்கு அருகில் உள்ளது. பெருங்கற்கால முதுமக்கள் தாழிகளும் இரும்பு, மணிக்கற்கள், சங்கு வேலைப்பாடுகள் குறித்த சான்றுகளும் இங்கே கிடைத்துள்ளன. தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட 300 க்கும் மேற்பட்ட மட்கலப் பொறிப்புகள் இங்கு கிடைத்துள்ளன.

**கீழடி:**

மதுரையிலிருந்து ராமேஸ்வரம் செல்லும் நெடுஞ்சாலையில் சிலைமான் என்ற ஊருக்கு அருகில் கீழடி உள்ளது. இங்கு சங்க கால நகரம் புதையுண்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. செங்கற் கட்டுமானங்கள் கழிவுநீர் வழிகள், தமிழ் பிராமி எழுத்துக்கள் கொண்ட மட்கல ஓடுகள், செம்மணிக்கற்களாலான அணிகள், முத்து, இரும்பு பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், கண்ணுக்கு மை தீட்டும் செம்புக் கம்பி போன்றவை கண்டறியப்பட்டுள்ளன.